செ.கு.எண் 81 நாள் :- 23.02.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – **23.2.2012**

சென்னை, திருவல்லிக்கேணி வட்டம், காமராஜர் சாலையில் 22.2.2012 அன்று லேடி வெல்லிங்டன் ஆசிரியை பயிற்சி பள்ளி அருகில், இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது சென்னை மாநகர பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த, சென்னை, முகலிவாக்கம் போரூரைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகன் திரு. S.ராஜேஷ் சம்பவ இடத்திலேயும், அவ்வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற திரு. பெர்னாஸ் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், களமாவூர் கிராமம், திருச்சிராப்பள்ளி – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் 22.2.2012 அன்று திருச்சிராப்பள்ளியிலிருந்து மணமேல்குடி சென்று கொண்டிருந்த அரசு பேருந்தும், புதுக்கோட்டையிலிருந்து திருச்சிராப்பள்ளி சென்று கொண்டிருந்த வேனும் நேருக்கு நேர் மோதியதில், வேனில் பயணம் செய்த அறந்தாங்கி வட்டம், மறமடக்கி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து மற்றும் திரு. சண்முகம் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயும், பலத்த காயமடைந்த திரு. அருள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விரு சாலை விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்